**செய்தி வெளியீட்டு எண்.25** **நாள்: 7.1.2010**

## <u>தொழில் நிறுவனங்கள் மாலை நேரத்தில் உயர்அழுத்த மின்சாரத்தை மின்சார வாரியத்தின் மூலம் வெளிச் சந்தையிலிருந்து பெற துரித நடவடிக்கை எடுத்தமைக்காக இந்திய தொழில் கூட்டமைப்பினர் துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி!</u>

இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு பிரிவின் நிர்வாகிகள் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களை சந்தித்து, மாலை **6.00** மணி முதல் இரவு **10.00** மணி வரை உயர் அழுத்த மின்இணைப்புகள் இயங்காததால், உற்பத்தி பாதிக்கப்பட்டு வேலைவாய்ப்பும் குறைகிறது என்று தெரிவித்திருந்தனர். இந்த நிலையை போக்குவதற்காக தொழில் நிறுவனங்கள், மாலை நேரத்தில் உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கான மின் இணைப்புகளுக்கு தேவையான மின்சாரத்தை கூடுதலாக வெளிச்சந்தையிலிருந்து மின்வாரியம் பெற்று விநியோகிக்க வேண்டுமென்றும், அவ்வாறு வழங்கப்படும் மின்சாரத்திற்கு உரிய கூடுதல் கட்டணம் செலுத்த முன்வருவதாகவும் இந்திய தொழில் கூட்டமைப்பினர் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களிடம் கோரிக்கை வைத்திருந்தனர்.

தமிழ்நாட்டில் நிலவும் மின்பற்றாக்குறையை ஈடு செய்யும் வண்ணம் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் குறிப்பாக உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கான மின் இணைப்புகளுக்கு மாலை 06.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை மின்சாரம் தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் 5 விழுக்காடு மட்டும் பாதுகாப்பு மற்றும் வெளிச்சத்திற்காக பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

சமீப காலமாக சர்வதேச அளவில் நிலவிவந்த பொருளாதார மந்தநிலை தற்பொழுது நீங்கி தொழில் மற்றும் அனைத்து துறைகளும் வேகமாக வளர்ச்சிப் பெற்று வரும் நிலையில், இந்திய தொழில் கூட்டமைப்பின் இக்கோரிக்கை குறித்து

துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு மின் வாரிய தலைவரிடம் தெரிவித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொண்டார். இதன் அடிப்படையில் தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் அனுமதியை முறையாகப் பெற்று இத்திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டுள்ளது.

இந்த கோரிக்கையின் மீது துரித நடவடிக்கை எடுத்து ஆவண செய்ததற்காக நன்றி தெரிவிக்கும் வகையில் இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு தலைவர் திரு.சி.ஆர். ரங்கநாதன் மற்றும் நிர்வாகிகள் மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களை இன்று **(7.1.2010)** தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

இந்த முறையினால், மீதமுள்ள 2 கோடியே 8 இலட்சம் மின்நுகர்வோர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் தொழில்துறையில் உற்பத்தி கூடுவதுடன், வேலைவாய்ப்பும் அதிகரிக்கும்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.